# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>சாதாரண கூட்டப் பொருள்</u>

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதி எண் 156(1) கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| 27.02.2025 | 1) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2024–2025, 24.06.2024 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைப்பெற்ற கல்வி மானியக் கோரிக்கையில் பள்ளிக்கல்வித்துறை மானியக்கோரிக்கை எண்.43, வரிசை எண்.17–ல் **"தூத்துக்குடியில் மாவட்ட மைய நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்** என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள்.<br>**"தூத்துக்குடி மாவட்டத்தில் வாசகர்கள் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட மைய நூலகத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்".**<br>(2) மேற்படி அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வாசகர்கள், பொது மக்கள் மற்றும் குறிப்பாக மாணவ / மாணவியர்களின் கல்வி அறிவை வளர்க்கும் விதமாக போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார் படுத்தவும், வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளும் வகையிலும் பெரிய அளவில் நூலகம் அமைவது மிகவும் அத்தியாவசியமாகிறது. எனவே நகரின் மையப் பகுதியில் அனைவரும் உபயோகப்படுத்தும் வகையில் தூத்துக்குடி மாநகராட்சி மூலம் **மேற்படி தனசேகர் நகர் பகுதியில் மனைப்பிரிவு எண். ம.வ./ந.ஊ.இ.எண்.63,6/89இல் அமைந்துள்ள மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பொது ஒதுக்கீடு (பள்ளி மற்றும் விளையாட்டு மைதானம்) கீழ்புறம் 44.74 செண்ட் இடத்தில், புதிய தொழில்நுட்ப வசதியுடன் மாவட்ட மைய நூலக கட்டடம் கட்ட** பொது நூலக இயக்குநர் கடித ந.க.எண்.4092/உ2/2024, நாள். 29.06.2024 நாளிட்ட **கடிதத்தில் மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**<br>(3) இதனைத் தொடர்ந்து, மேற்காணும் இடத்தில் மாநகராட்சி மூலம் ரூ.9.92 கோடி மதிப்பில் மாவட்ட **மைய நூலக கட்டடம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. மேலும், மேற்படி மதிப்பீட்டில் நூலக கட்டடம்** | 590) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
கட்ட ஆகும் செலவினத்தை தூத்துக்குடி மாநகராட்சி யானது தூத்துக்குடி மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட வேண்டிய நூலக வரி நிலுவைத் தொகை (2024–2025 வரை) ரூ.14,28,49,297/–இலிருந்து ஈடு செய்துக் கொள்ள இசைவு வழங்க கோரி பொதுநூலக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடித எண் இ1/3359/2024, நாள் 05.11.2024 மற்றும் 14.12.2024 ன் படி அனுப்பபட்டது.<br>
(4) இதனைத் தொடர்ந்து பொது நூலக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 4092/உ2/2024, நாள் 27.12.2024 தேதிய கடிதத்தில், மேற்படி நூலக கட்டடத்திற்கு தயார் செய்து வழங்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் படி ரூ.9.92 கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் செலவினத்தை தூத்துக்குடி மாநகராட்சியால் தூத்துக்குடி மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட வேண்டிய நூலக வரி நிலுவைத் தொகை (2024–2025 வரை) ரூ.14,28,49,297/–இலிருந்து ஈடு செய்துக் கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
எனவே, மேற்கண்ட விபரப்படி தூத்துக்குடி மாவட்ட மைய நூலக கட்டடம் (G+2) தரைத்தளம் 1242.50 ச.மீ, முதல் தளம் 1005.50ச.மீ மற்றும் இரண்டாம் தளம் 952 ச.மீ மொத்தம் 3200 சதுர மீட்டர். (34444.8 சதுரடி) அளவில் ரூ.9.92 கோடி மதிப்பீட்டில் கட்டவும் அதற்கான நிதியினை நூலக வரி நிலுவைத் தொகை (2024–2025 வரை) ரூ.14,28,49,297/–இலிருந்து ஈடு செய்துக் கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : 1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
2)மாண்புமிகுமேயர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் அனுமதிக்கலாம்.<br>
இ1/3559/2024
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>
2) தூத்துக்குடிமாநகராட்சியில்,மாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் அரசுபள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்புவரைபயிலும் மாணவமாணவியர்களுக்குகாலைசிற்றுண்டிவழங்கும் திட்டத்தை 18பள்ளிகளுக்கு ஒருங்கிணைந்தசமையற்கூடம்(Central Community Kitchen) அமைத்து செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/M-1நாள் 30.01.2022ல் தெரிவித்துள்ளதற்கிணங்கவும், அதன் வடிவமைப்பின்படியும் இம்மாநகராட்சியில், லூர்தம்மாள்புரம் அம்மா உணவகத்தில் பராமரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த சமையற் கூடத்தின் மூலம் காலை உணவுவழங்கப்படும் பள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-<br>
<u>ஒருங்கிணைந்தசமையற்கூடம் 1: (லூர்தம்மாள்புரம்அம்மாஉணவகம்)</u>
<table>
<tr>
<th>வ.எண்.</th>
<th>பள்ளியின் விபரம்</th>
<th>பள்ளிஅமைந்துள்ள இடம்</th>
<th>பள்ளிகுழந்தைகளின் எண்ணிக்கை</th>
<th>ஒருங்கிணைந்தசமையற் கூடத்தில் இருந்துபள்ளிஅமைந்துள்ள தூரம்</th>
</tr>
</table>
</td>
<td>591)அலுவலகக் குறிப்பு 1,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கிலோமீட்டரில் | |
| | 1 | வீரநாயக்கன்தட்டுமாநகராட்சிஆரம்பபள்ளி | தெற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 33 | 8.00 | |
| | 2 | முடுக்காடுமாநகராட்சிஆரம்பபள்ளி | தெற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 25 | 9.20 | |
| | 3 | J.Sநகர் மாநகராட்சிஆரம்பபள்ளி | தெற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 49 | 2.80 | |
| | 4 | டூவிபுரம் மாநகராட்சிஆரம்பபள்ளி | மேற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 180 | 5.10 | |
| | 5 | சாமுவேல்புரம் மாநகராட்சிஆரம்பபள்ளி | வடக்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 275 | 1.00 | |
| | 6 | S.Vமாநகராட்சிஆரம்பபள்ளி | கிழக்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 90 | 3.50 | |
| | 7 | லெவஞ்சிபுரம் மாநகராட்சிஆரம்பபள்ளி | தெற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 80 | 5.40 | |
| | 8 | சங்கரபேரிஅரசுஆரம்பபள்ளி(Backward Class Welfare) | வடக்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 46 | 3.20 | |
| | 9 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளிமேலூர் | கிழக்கு மண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 376 | 13.00 | |
| | 10 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளிவடக்குபத்திராகாளியம்மன் கோவில்தெரு | கிழக்கு மண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 79 | 13.50 | |
| | 11 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளிதெற்குபுதுத்தெரு | கிழக்கு மண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 72 | 12.00 | |
| | 12 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளிஜீன்பேக்ட்ரி சாலை | கிழக்கு மண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 291 | 10.00 | |
| | 13 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளிசண்முகபுரம் | மேற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 76 | 9.25 | |
| | 14 | மாநகராட்சி | மேற்குமண்டல | 542 | 9.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடுநிலைப்பள்ளிசிவந்தாகுளம் | ம் தூத்துக்குடிமாநகராட்சி | | |
| 15 | ஊராட்சிஒன்றியநடுநிலைப்பள்ளிதெர்மல்நகர், கேம்ப் 1 | தெற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 28 | 7.20 |
| 16 | ஊராட்சிஒன்றியநடுநிலைப்பள்ளிதேவர் காலனி, சங்கரப்பேரி, தூத்துக்குடி | வடக்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 103 | 16.00 |
| 17 | மாநகராட்சிநடுநிலைப்பள்ளிபாரதிநகர் | தெற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 102 | 1.40 |
| 18 | அரசுஉயர்நிலைப்பள்ளிஎம். தங்கம்மாள்புரம் | தெற்குமண்டலம் தூத்துக்குடிமாநகராட்சி | 150 | 3.20 |
| | மொத்தம் | | **2597** | |

இம்மாநகராட்சிக்குட்பட்ட18 எண்ணம் அரசுபள்ளிகளில் முதலமைச்சர் காலைஉணவுத் திட்டத்தில் **1** முதல் 5ம் வகுப்புவரை பயிலும் **2597** மாணவமாணவியர்களுக்கு காலை சிற்றுண்டிஉணவினை வழங்குவதற்கு ஏதுவாக சமையல் பாத்திரங்கள், எரிவாயு சிலிண்டர், மற்றும் தேவையான உணவுபொருட்களுடன் காலை சிற்றுண்டிஉணவினை தயார் செய்து மேற்படி 18பள்ளிகளுக்கும் கொண்டு செல்வதற்கான வாகன வாடகை மற்றும் போக்குவரத்து கட்டணம் போன்ற இனப் பணிகளுக்கும் சேர்த்து மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி பணிக்கு 23.01.2025 முதல் ஒப்பந்த ஆவணம் (Bid Document) http://www.tntenders.gov.inஎன்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு 07.02.2025 முடிய பதிவிறக்கம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில 07.02.2025 அன்று மின்னணுமுறையில் No Food Waste, Coimbatore மற்றும் M/s.SKB Enterprises, Salem இரண்டு நிறுவனத்திடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டது. மேற்படிNo Food Waste, Coimbatore நிறுவனத்தின் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண் **20/24–25**நாள்10.02.2025 ல் தொழில்நுட்ப கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டு 12.02.2025அன்று விலைப்புள்ளி உறை திறக்க ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று திறக்கப்பட்டதின் ஒப்புநோக்குபட்டியல்கீழ்கண்டவாறு:

| **Sl. No.** | **Description** | **Quoted Rate per Packet in figure & in Words (No Food Waste, Coimbatore)** |
|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | Average Cost of One Breakfast with 150 to 200 gms plus 60 ml of vegetable sambar including the cost of transportation to supply the food to the designated locations. The breakfast may be any one of the below indicated items and the same should be supplied as per the specification and recipe given by the authority.<br><br>**Day** / **Menu**<br>Monday: Rava Uppuma + Vegetable sambar; Semiya Uppuma + Vegetable sambar; Rice Uppuma + Vegetable sambar; Wheat Uppuma + Vegetable sambar<br>Tuesday: Rava vegetable kitchadi; Vegetable semiyakitchadi; Vegetable sola kitchadi; Vegetable wheat Kitchadi<br>Wednesday: Rava pongal + Vegetable sambar; Venpongal + Vegetable sambar<br>Thursday: Semiya Uppuma + Vegetable sambar; Rice Uppuma + Vegetable sambar; Rava Uppuma + Vegetable sambar; Wheat Uppuma + Vegetable sambar<br>Friday: Any one kitchadi (as per Tuesday table Menu); Rava Kesari; Semiya kesari | Rs.12.65Twelve Rupees and Sixty Five Paise | |

| Day | Menu |
|---|---|
| Monday | Rava Uppuma + Vegetable sambar<br>Semiya Uppuma + Vegetable sambar<br>Rice Uppuma + Vegetable sambar<br>Wheat Uppuma + Vegetable sambar |
| Tuesday | Rava vegetable kitchadi<br>Vegetable semiyakitchadi<br>Vegetable sola kitchadi<br>Vegetable wheat Kitchadi |
| Wednesday | Rava pongal + Vegetable sambar<br>Venpongal + Vegetable sambar |
| Thursday | Semiya Uppuma + Vegetable sambar<br>Rice Uppuma + Vegetable sambar<br>Rava Uppuma + Vegetable sambar<br>Wheat Uppuma + Vegetable sambar |
| Friday | Any one kitchadi (as per Tuesday table Menu)<br>Rava Kesari<br>Semiya kesari |

<table>
<tr>
<td></td>
<td>3)தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான மகளிர்களுக்கு மட்டும் தனித்துவமான பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள பெண்கள் பூங்காவில் (Pink Park) உள்ள உடற்பயிற்சி கூடவளாகத்தில் யோகா, ஜும்பாநடனம் மற்றும் சிலம்பம், ஆகிய பயிற்சி வகுப்புகள் மகளிர் பயிற்றுநர்கள் வாயிலாக அனைத்து மகளிருக்கும் இலவசமாக கீழ்கண்டுள்ளவாறு பயிற்சி அளிக்கப்பட்டு வரப்படுகிறது. எனவே, மேற்படி பயிற்றுநர்களுக்கு மாதம் ஊதியம் 01.11.2024 முதல் 31.03.2026 முடிய காலத்திற்கு நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து கீழ்கண்டுள்ளவாறு ஊதியம் வழங்கவும், அதற்கான உத்தேச செலவீனத்திற்கு ரூ. 5.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பயிற்சி வகுப்புகள் விபரம்</th><th>கிழமைகள்</th><th>மாத ஊதியம்(ரூ)</th></tr>
<tr><td>1</td><td>ஜும்பா நடனம்</td><td>செவ்வாய், வியாழன் மற்றும் சனி</td><td>ரூ.10,000/–</td></tr>
<tr><td>2</td><td>சிலம்பம்</td><td>திங்கள், புதன், வெள்ளி மற்றும் சனி</td><td>ரூ.10,000/–</td></tr>
<tr><td>3</td><td>யோகா</td><td>வார அனைத்து நாட்கள்</td><td>ரூ.20,000/–</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு<br>
மேற்படி மகளிர் பூங்காவில் உள்ள உடற்பயிற்சி கூடவளாகத்தில் ஜும்பாநடனம் யோகா பயிற்சி மற்றும் சிலம்பம் பயிற்றுநர்களுக்கு 01.11.2024 முதல் 31.03.2026 வரை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 5.00 இலட்சம் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
இ1/2881/2024</td>
<td>592)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>4) இம்மாநகராட்சியில் பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு அலுவலருக்கு ஒப்பந்த அடிப்படையில் 5 எண்ணம் Bollero Jeep வாகனங்களை வாடகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு வழங்கிட M/s.Paulkani Travels நிறுவனத்திற்கு, மாமன்ற தீர்மான எண்.541, நாள்.28.10.2024 வேலை உத்திரவு வழங்கப்பட்டு வாடகை வாகனம் பயன்பாட்டில் இருந்து வருகிறது.<br>
இவ்வாறான நிலையில், மேலும் இவ்வலுவலகத்தில் உதவி ஆணையர், மேற்கு மண்டலம், உதவி செயற்பொறியாளர், கிழக்கு மற்றும் மேற்கு மண்டலம் , சுகாதார அலுவலர், வடக்கு மண்டலம் அவர்களின்</td>
<td>593)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப் பட்டது.<br>2.அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலக பயன்பாட்டிற்கு அலுவலக வாகனம் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட 3 அலுவலர்களுக்கு 3 எண்ணம் Bollero Jeep வாகனங்களைமாத வாடகை அடிப்படையில், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த அதே விலை விகிதத்தில் (ரூ.38,850/—வீதம்), மேற்கண்ட M/s.Paulkani Travels, Thoothukudi நிறுவனம் வழங்க சம்மதம் தெரிவித்தன் அடிப்படையில், வாகனத்தின் அவசர அவசியம் கருதி 01.11.2024 முதல் 31.03.2025 வரை ஐந்து மாத காலத்திற்கு மேற்கண்ட M/s.Paulkani Travels, Thoothukudi நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.6,99,300/—ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. ஒப்பந்தபுள்ளி கோரும் பட்சத்தில் ஏற்படக்கூடிய கால விரயம் காரணமாக, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி M/s.Paulkani Travels,Thoothukudi நிறுவனத்திற்கு, 01.11.2024 முதல் 31.03.2025 வரை ஐந்து மாத காலத்திற்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று செயல்பட்டதை அங்கீகரிக்கலாம்.<br><br>இ5/0257/2022 | |
| | 5) தூத்துக்குடி மாவட்ட நூலக அலுவலர் அவர்களின் 13.12.2024 ம் தேதிய ந.க 4544/அ1/2024 எண்ணிட்ட கடிதத்தில் தூத்துக்குடி சிதம்பர நகர் பகுதியில் அரசு முழு நேர கிளை நூலகத்தை அமைப்பதற்கு ஏதுவாக ஏதேனும் கட்டிடங்கள் இருப்பின் வாடகை இல்லாமல் இயங்குவதற்கு உதவிடுமாறு கோரப்பட்டுள்ளது. மேலும் மத்திய தேர்வாணையத் தேர்வுகளுக்கு பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவச நூலகம் அமைத்திட மாநகராட்சி கட்டிடம் இலவசமாக ஒதுக்கி தருமாறு தனியார் தொண்டு நிறுவனத்தாரால் கோரப்பட்டுள்ளது.<br>தற்போது, தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் சிதம்பர நகர் பகுதியில் கட்டப்பட்ட தரைத்தளம் முதல் மற்றும் இரண்டாம் தளத்துடன் கூடிய புதிய கட்டிடமானது பயன்படுத்துவதற்கு தயார் நிலையில் உள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தினை பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் வாசிப்பு திறனை மேம்படுத்துவதற்கும் குறிப்பாக, போட்டித் தேர்வுகளுக்கு | 594)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | தயாராகும் இளைஞர்களுக்கு பயன்பெற ஏதுவாகவும் தரை தளத்தினை மாவட்ட நூலகத்திற்கு வழங்கிடவும் முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் தனியார் பங்களிப்புடன் அரசு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் படிப்பதற்கு தேவையான புத்தகங்கள் இருக்கை வசதிகள் மற்றும் இதர அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திடவும் தேர்வு தொடர்பான கலந்தாய்வு கூட்டங்கள் மாவட்ட நூலகத்தின் முழு பொறுப்பில் நடத்துவதற்கும் முறையாக கண்காணித்து பயன்படுத்திட ஏதுவாகவும் மேற்படி கட்டிடத்தினை வாடகை இல்லாமல் பயன்படுத்திடும் வகையில் தரைத்தளம் மாவட்ட நூலகத்திற்கும் முதல் மற்றம் இரண்டாம் தளம் தனியார் தொண்டு நிறுவனத்திற்கும் வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு:– பொது நலன் கருதி மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தினை சிதம்பர நகர் கிளை நூலகமாகவும் முதல் மற்றும் இரண்டாம் தளங்களை தனியார் தொண்டு நிறுவனமும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாடகை இல்லாமல் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கலாம்.<br>அ 16/2822/2024 | |
| | 6) (அ) தூத்துக்குடி மாநகராட்சி கட்டிட அனுமதி வழங்க வசூலிக்கப்படும் கட்டண விலைப்பட்டியல் (Schedule of rate) மாமன்ற தீர்மான எண் 496 நாள் 31.07.2024ன்படி தற்போது குடியிருப்பு கட்டிடத்திற்கு 1 ச.மீக்கு ரூ.850/–ம், குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு 1 ச.மீக்கு ரூ.1,100/–ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. வைப்புத் தொகை போன்ற இதர கட்டணங்கள் மாமன்ற தீர்மான எண் 97 நாள் 07.03.2019ன்படி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத குடியிருப்பு (ம) குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைச்சாளர இணைய முகப்பில் (SINGLE WINDOW PORTAL) கட்டிட அனுமதி வழங்குவதற்கு செலுத்தவேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி1) துறை அரசாணை (ப) எண் 72 நாள் 05.02.2025ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குனர்,சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 31917/2019/டிபி2 நாள்13.02.2025 உத்தரவில் தூத்துக்குடி மாநகராட்சிக்கென தனியாக குடியிருப்பு கட்டிடங்களுக்கு ( I&A CHARGES 188/-, BUILDING LICENSE FEE 423/-, DC 7/- , LWF 232/-) 1 ச.மீக்கு ரூபாய் 850/– ம் ,1 ச.அடிக்கு ரூபாய் 79/– ம் | 595)அலுவலகக் குறிப்பு<br>1.மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.<br>2.மாமன்றத்தில் ஒப்புதல் வழங்கப் பட்டது. |

ஒருங்கிணைந்த கட்டணமாகவும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு (I&A CHARGES 188/-, BUILDING LICENSE FEE 668/-, DC 14/- , LWF 193/-) **1** ச.மீட்டர்க்கு ரூபாய் **1063/–** ம், **1** ச.அடிக்கு **99/–**ம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்ட வைப்புத் தொகை

| வ.எண் | நகர்ப்புற உள்ளாட்சியின் வகைப்பாடு | கட்டுமான பரப்பளவு | கட்டட உபயோகம் | |
|---|---|---|---|---|
| | | | குடியிருப்பு கட்டுமானம் | குடியிருப்பு அல்லாத கட்டுமானம் |
| **1** | மாநகராட்சிகள் | **3500** சதுர அடிக்கு கீழ் | **10,000/–** | **20,000/–** |
| **2** | | **3501** – **10.000** சதுர அடி | **15,000/–** | **30,000/–** |
| **3** | | **10,001** சதுர அடிக்கு மேல் | **25,000/–** | **50,000/–** |

மேற்கண்டவாறு வசூல் செய்திடவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**(** ஆ**)** ஏற்கனவே நடைமுறையில் உள்ள மாமன்ற தீர்மான எண் **496** நாள் **31.07.2024** தேதிய உரிமக் கட்டண வீதத்தினை ரத்து செய்திடவும், தற்போது அரசாணை எண் **72** நாள் **05.02.2025** ன்படி தேதிய குறிப்பிட்டுள்ள கட்டணங்களுடன் கீழ்கண்ட வைப்பு தொகை மற்றும் இதர கட்டணங்கள் வசூல் செய்யவும்

| I)வ.எண் | வைப்பு தொகை | ரூபாய் |
|---|---|---|
| **1** | **மழைநீர் சேகரிப்பு வைப்பு தொகை**<br>கட்டிட மேற்பரப்பு(Open Terrace) | |
| | குடியிருப்பு **1** ச.மீக்கு மற்றும் | **75/–** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>அதன் பாகத்திற்கும்</td><td></td></tr>
<tr><td></td><td>குடியிருப்பு அல்லாத 1 ச.மீக்கு மற்றும் அதன் பாகத்திற்கும்</td><td>150/–</td></tr>
<tr><td>2</td><td>பாதுகாப்பு வைப்பு தொகை (உள்ளூர் திட்டக் குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்படும் குடியிருப்பு மற்றம் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு நீங்கலாக)</td><td>அரசால் நிர்ணயிக்கப்படும் உள்கட்டமைப்பு கட்டணத்தில் 50%</td></tr>
<tr><td>3</td><td>காட்சி பலகை (Display Board) அனைத்து கட்டிடங்களுக்கு</td><td>1500/–</td></tr>
<tr><td>4</td><td>பழைய கட்டிடம் இடித்தல் உரிமக் கட்டணம் 1 ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கும்</td><td>150/–</td></tr>
</table>
II) அனுமதியின்றி கட்டிட பணி துவங்கும் இனங்களுக்கு உரிமம் வழங்கும்போது குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டணத்தில் 10% கூடுதல் கட்டணமாக வசூல் செய்யலாம்.
மேற்கண்ட கட்டணங்கள் அனைத்தும் 01/03/2025 முதல் நடைமுறைப்படுத்தலாம்.
அலுவலக குறிப்பு :<br>மன்றப்பொருள் (அ ) மாமன்ற பதிவு செய்யலாம்.<br>மன்றப்பொருள்(ஆ) மாமன்ற ஒப்புதல் செய்யலாம்.
எப்1/2977/2024
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>
7) தூத்துக்குடி மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்40, மரக்குடி தெரு, கதவு எண் 91 என்ற முகவரியில் உள்ள கட்டிடத்திற்கு இரண்டு குடிநீர் இணைப்பு உள்ளது எனவும் அதில் ஒரு குடிநீர் இணைப்பு மட்டும் பயன்பாட்டில் உள்ளதாகவும், தவறாக கூடுதலாக உள்ள குடிநீர் கட்டண கேட்பை ரத்து செய்யுமாறும் திரு அண்டன் லெனார்ட் ஜாய் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார்.
மேற்படி இடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் 14/11/24 தேதிய அறிக்கையின்படி மேற்படி கட்டிடத்தில் ஒரு குடிநீர் இணைப்பு மட்டுமே பயன்பாட்டில் உள்ளது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அக்குடிநீர்
</td>
<td>596)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>இணைப்பிற்கு வரிவிதிப்பு 138/40/901000 எண் மூலம் தற்போது வரை முறையாக குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. எனவே தவறுதலாக கணினியில் எழுப்பப்பட்ட குடிநீர் கட்டண வரிவிப்பு எண் 138/040/900998 ணை கணினியிலிருந்து ரத்து செய்யவும், அதற்கான தவறாக எழுப்பப்பட்ட 2024-25 வரையிலான கேட்புத்தொகை நிலுவை ரூ 22505/- னை ரத்து செய்யவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு ; மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ2/03/2024/கிம</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>8) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2015 மற்றும் 2023 ஆண்டு பெய்த கனமழையின் காரணமாக உப்பாறு ஓடையில் உடைப்பு ஏற்பட்டு மழை வெள்ள நீர் தேசிய நெடுஞ்சாலையின் (NH) வழியாக தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள பக்கிள் ஓடைக்கு வந்து கடலுக்கு சென்றது. மேற்கண்ட பக்கிள் ஓடையின் அகலம் 7.00 மீட்டர் ஆகும். இதனால் பக்கிள் ஓடைக்கு வரும் மழைநீர் பக்கிள் ஓடையின் கொள்ளளவினையும் தாண்டி பக்கிள் ஓடையின் இருபுறமும் உள்ள தெருக்களில் உள்ள குடியிருப்புகளில் செல்லும் நிலையில் இருந்தது. இதனால், குடியிருப்பு பகுதிகளில் செல்லும் மழைநீரை மோட்டார் வைத்து பம்பிங் செய்து அகற்ற வேண்டியுள்ளது. இதனால் பொதுமக்களுக்கும் மாநகராட்சிக்கும் சிரமம் ஏற்பட்டு வருகிறது.<br>எனவே, இதனைத் தவிர்க்கும் தேசிய நெடுஞ்சாலை பாலத்தில் இருந்து FCI குடோன் வரையில் உள்ள பக்கிள் ஓடை Earthen Canel ஆக உள்ளதை RCC Canel ஆக மாற்றவும், மற்றும் பக்கிள் ஓடை முடிவடையும் கடல் பகுதியில் புதியதாக தடுப்பு சுவர் அமைக்கவும் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.
<table>
<tr><th>Sl. No</th><th>Name of the Work</th><th>Est. Amount (In lakh)</th></tr>
<tr><td>1</td><td>Construction of RCC Lined Canal with Retaining wall and RCC solid bridge for buckle canal chainage from 7140.00 M to 7490.00 M (FCI Godown)</td><td>500.00</td></tr>
</table>
</td>
<td>597) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 2 | Construction of Lined Canal with Retaining wall and Stone Pitching for buckle canal chainage from 0.00 to 55.00 M (Disposal Point) | 58.00 |
| | **Total** | **558.00** |

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மான்ய நிதி **2024–2025**ன் கீழ் ரூ.**558.00**

| **.Sl.No** | **Name of the Work** | **Est. Amt** | **Funding Pattern** | |
|---|---|---|---|---|
| | | | **Central Share** | **State Share** |
| 1 | Construction of Public Toilet (Type 2 Design) at Muthu Nagar Beach in East zone ward no 25 | **36.25** | **47.90** | **31.90** |
| 2 | Construction of Public Toilet (Type 2 Design) at Aringar Anna Bus stand in West zone ward no 29 | **36.25** | | |
| 3 | Construction of Public Toilet (Type 2 Design) at Roche Park in East zone ward no 47 | **36.25** | | |
| 4 | Construction of Public Toilet (Type 2 Design) near GH in West zone ward no 36 | **36.25** | | |
| | **Total** | **145.00** | **47.90** | **31.90** |
| | | | **(Rs.47.90+31.90 = Rs.79.80** | |

இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் **12079/2024**/SS2 நாள் **06.02.2025**ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி பணிக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மான்ய நிதி **2024–2025**ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.**258.00** இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.**300.00** இலட்சம் மாநகராட்சி

| | | |
|---|---|---|
| | பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இதன்படி மேற்படி பணிக்கு வரப்பெற்ற நிர்வாக அனுமதி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்<br><br>இ1/00049/2025 | |
| | 9) தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் 9 வது மாநில உயர்மட்டக்குழு கூட்டத்தின் 20.12.2024 நாளிட்ட நடவடிக்கைகளின் படி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் அளித்து பணிகள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 192/2025/SBM–1–2, நாள் 10.01.2025ல் இம்மாநகராட்சிக்கு பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் ரூ.145.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு மத்திய அரசு மான்யமாக ரூ.47.90 இலட்சமும், மாநில அரசு மான்யமாக ரூ.31.90 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>இதன்படி, தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது<br>எனவே, மேற்படி பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டும் பணிக்கு மான்ய தொகை போக கூடுதலாக வரும் தொகை ரூ. 65.20 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதையும் அனுமதிக்கலாம்<br>இ1/4802/2024 | 598)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |
| | 10) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதி திட்டம் 2024–25ன் கீழ் மேற்கு மண்டலம் வார்டு எண் 36 அரசு மருத்துவமனை வளாகம் நுழைவுவாயில் பகுதியிலிருந்து சிதம்பர நகர் பிரதான சாலை சந்திப்பு வரை (VVD Signal) புதிதாக தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும்பணிக்கு ஒப்பந்தபுள்ளி 24.12.2024 அன்று கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளி உறை 24.12.2024 அன்று 3.30 மணிக்கு | 599)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | திறக்கப்பட்டது.<br>1. Thiru. S.Rambola, Thoothukudi– ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 0.50% குறைவு (ரூ.28,11,965.00)<br>2. Thiru. S.Rex, Thoothukudi– ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட1.08% அதிகம் (ரூ.28,56,500.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.20% குறைவான தொகை ரூ.33,28,348.45 (GST நீங்கலாக) கொடுத்துள்ள Thiru. S.Rambola, Thoothukudi, ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. Thiru.S.Rambola, Thoothukudi ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மதிப்பீட்டைவிட 0.20% குறைவாக கொடுத்துள்ள Thiru. S.Rambola, Thoothukudi ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/4697/2024 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 27.02.2025

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி